

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.12.2024) சென்னை, பெரம்பூர், டான்போஸ்கோ பள்ளி வளாகத்தில், திராவிட முன்னேற்றக் கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில், கிறிஸ்துமஸ் தாத்தா (SANTA CLAUS) வேடமணிந்த குழந்தைகள் மற்றும் அருட்சகோதரிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம் தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப்பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.12.2024) சென்னை, அண்ணா சாலை பல்லவன் இல்ல மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்வில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா கொண்டாட்டத்தையொட்டி, பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக விரைவு பேருந்துகளின் பயணத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமன நடைமுறையில் மாற்றம்!

### தகுதியான நீதிபதிகளை நேரில் அழைத்து நேர்காணல்!

புதுடெல்லி, டிச. 25 -

உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமன நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

முதன் முறையாக தகுதியானவர்களை நேரில் அழைத்து உச்சநீதிமன்ற கொலிஜியம் நேர்காணல் நடத்தியுள்ளது.

உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்க உச்சநீதிமன்ற கொலிஜியம் ஆலோசனை நடத்தி பரிந்துரைகளை ஒன்றிய அரசுக்கு அனுப்புவது இதுவரை வழக்கமாக இருந்தது.

இந்நிலையில், இந்த நடைமுறையில் மாற்றம் செய்யப்பட்டு, நீதிபதிகள் நியமனத்துக்கு பரிந்துரைக்க உள்ள கீழமை நீதிமன்ற நீதிபதிகள்,

மூத்த வழக்கறிஞர்கள் ஆகியோரை அழைத்து உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா தலைமையிலான மூன்று நீதிபதிகள் அடங்கிய கொலிஜியம் நேர்காணல் நடத்தி உள்ளது.

மும்பை, அலகாபாத், ராஜஸ்தான் மாநில உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்க நேற்று முன்தினம் நேர்காணல் நடைபெற்றது. அண்மையில் அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதி பொது வெளியில் பேசிய கருத்துகள் சர்ச்சையானது.

கடந்த வாரம் சம்பந்தப்பட்ட நீதிபதியை நேரில் அழைத்து கொலிஜியம் எச்சரிக்கை செய்தது.

இதனைத் தொடர்ந்து உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இந்த புதிய நேர்காணல் நடைமுறை தொடங்கி இருப்பதாக கூறப்படுகிறது.

### கேரளா திருப்பி அள்ளிச் சென்ற வரலாறு கிடையாது! இங்கு வந்து

## மருத்துவக் கழிவுகளைக் கொட்டினால் கைது நடவடிக்கை!

### அமைச்சர் கே.என்.நேரு எச்சரிக்கை!

நெல்லை, டிச. 25 -

மருத்துவக் கழிவுகளை கேரளா திருப்பி அள்ளிச் சென்றதாக சரித்திரம் கிடையாது, இப்போது தான் நடந்துள்ளது. இனி கொண்டு வந்து கொட்டினால் கைது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் கே.என்.நேரு எச்சரித்துள்ளார்.



நெல்லை மாவட்டம், மணிமுத்தாறு அணையில் இருந்து பிசான நெல் சாகுபடிக்கு சபாநாயகர் அப்பாவு, அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் தண்ணீர் திறந்து வைத்தனர்.

பின்னர் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பேட்டி வருமாறு :

கேரள மருத்துவக் கழிவுகள் மீண்டும் அள்ளிச் செல்லப்பட்டுள்ளது. இதற்காக கலெக்டர் நடவடிக்கை எடுத்துள்ளார். இது தொடர்பாக தமிழ்நாடு அரசுக்கும் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகள் இனி நடக்காது. இனி கொண்டு வர மாட்டார்கள். திருப்பி கழிவுகளை அள்ளிச் சென்றதாக சரித்திரம் கிடையாது. இனி கொண்டு வந்தால் கைது செய்து நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றிய அரசின் அனுமதி பெற்று மாநில அரசின் திட்டங்களுக்காக கடன் வாங்குகிறோம்.

**அண்ணாமலையிடம்தான் கேட்க வேண்டும்!**

ஒரு நிதியை நினைத்த உடன் திட்டங்களுக்கு எடுத்து செலவு செய்ய முடியாது. அண்ணாமலை சொல்கிறார், அவர் எஸ்.பி.யாக இருந்தவர். வாங்கும் பணத்தை அந்த திட்டத்திற்கு செலவு செய்ய முடியாமல் வேறு எந்த திட்டத்திற்கு செலவு செய்ய முடியும். அவர் சொல்வது குறித்து அவரிடம்தான் விளக்கம் கேட்க வேண்டும். மணிமுத்தாறு - பாபநாசம் அணைகள் இணைப்பது குறித்து முதல்வரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் பேட்டியளித்தார்.

### குவைத்தில் தி.மு.க. அயலக அணி சார்பில்,

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் "மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு"!

### கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி – தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் பங்கேற்பு!

குவைத், டிச. 25 -

குவைத்தில் உள்ள தி.மு.க. அயலக அணி சார்பில், வருகிற 03.01.2025, வெள்ளிக்கிழமை, மாலை 5.00 மணியளவில் "குவைத் தளபதி பேரவை" நடத்தும் புலம்பெயர்ந்த தமிழர்களின் நலன் காக்கும் திராவிட மாடல் ஆட்சியின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் "மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு" குவைத், தஸ்மா டீச்சர் சொசைட்டியில் நடைபெற உள்ளது.

இம்மாநாட்டில் தலைமைக் கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர்.

இம்மாநாட்டில் குவைத் வாழ் அரசியல் கட்சி நிர்வாகிகள், தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், குவைத் வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் கலந்து கொள்ள உள்ளனர்.



இம்மாநாட்டு ஏற்பாட்டினை குவைத் அயலக அணி தளபதி பேரவை அமைப்புச் செயலாளர் மேட்டுப்பட்டி ராஜாமுஹமது தலைமையில் கவிஞர் அல் அவ்தா சாதிக் பாச்சா கவிஞர் விட்டு கட்டி மஸ்தான் கவிஞர் சம்சுதீன் கிளாட்வின் பாக்கியராஜ் காளிதாசன், சரவணன் ராஜு, நாசர் முஹம்மது, பாண்டி ஜாகிர் உசேன், எதுமலை பாவாசா சேஃப்டி குமார், சாமி மங்களேஸ்வரன், மற்றும் நிர்வாகிகள் முன்னின்று நடத்துகின்றனர்.



திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில், தந்தை பெரியார் அவர்களின் 51வது நினைவு நாளை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., மு.பெ.கிரி.எம்.எல்.ஏ., இரா.ஸ்ரீதரன், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், மேயல் நிர்மலாவேல்மாறன், எல்.ஐ.சி. து.வேலு உட்பட பலர் உள்ளனர்.

